10.03.2026

OS No: 303/ 2023

வா.சா. 1 திரு. ராஜேஸ்வரி க/பெ மெய்யப்பன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 161/3 ஆகும் விஸ்தீரணம் 1200 ச.அடி. தாவா சொத்து எந்த வருவாய் கிராமத்தில் உள்ளது என்றால் சிவரக்கோட்டையில் உள்ளது. பிரதிவாதி 02.03.2010 ல் என்னிடம் ரூபாய் 4 லட்சம் கடனாக 5 வட்டிக்கு என்னிடம் வாங்கியிருந்தார் என்றால் 5 வட்டி என்பது தவறு 2 வட்டி ஆகும் மேற்படி கடன் தொகையை பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டார். 02.03.2010 ஆம் தேதிய கடன் தொகை பிரதிவாதி பெற்றபோது பிரதிவாதி கையெழுத்திட்ட வெற்று காசோலை 3 பிரதிவாதி கையெழுத்திட்ட வெற்று தாள் 3 என்னிடம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார் அவற்றை திருப்பி வாங்கி சென்றுவிட்டார். மேற்படி கடன் ரூபாய் 4 லட்சத்தினை பிரதிவாதியின் அண்ணன் மகன் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாகனேரி கிளை மற்றும் சொக்கநாதபுர கிளை ஆகிய வங்கியின் மூலமாக எனக்கு திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரிதான். மேற்படி 02.03.2010 ஆம் தேதிய கடன் தொகையை திருப்பி செலுத்திவிட்டு பிரதிவாதி கையெழுத்திட்ட வெற்று காசோலை 3 பிரதிவாதி கையெழுத்திட்ட வெற்று தாள் 3 ஆகி ய ஆவணங்களை திருப்பி கேட்டதர்க்கு மேற்படி ஆவணங்கள் 6 மாத காலங்கள் மட்டுமே செல்லுபடியாகும் என்றும் அதனால் மேற்படி ஆவணங்களை கிழித்து போட்டு விட்டதாக சொல்லி பிரதிவாதி வசம் மேற்படி ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. 14.05.2014 ஆம் தேதியன்று பிரதிவாதி மீண்டும் என்னிடம் ரூ 2 லட்சம் கடனாக வாங்கினார் என்றால் சரிதான் மேற்படி கடன் தொகையை பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துப்பத்திரத்தினை கொடுத்திருந்தார் என்றால் சரிதான் மேற்படி பத்திரத்தினையும் திருப்பி வாங்கி சென்றுவிட்டார் எந்த தேதியில் மேற்படி கடன் தொகையை பிரதிவாதி திருப்பி செலுத்தினார் என்றால் நியாபகம் இல்லை. 06.02.2018 ஆம் தேதியன்று பிரதிவாதி மீண்டும் என்னிடம் ரூ 2 லட்சம் கடனாக வாங்கினார் என்றால் சரிதான் மேற்படி கடன் தொகையை பிரதிவாதி திருப்பி செலுத்திவிட்டார். 06.02.2018 ஆம் தேதிக்கு பிறகு கொரோனா நோய் பரவியதால் மேற்படி தொகைக்கு பிரதிவாதியால் வட்டி செலுத்த முடியவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பாத்தியமான சர்வே எண்

161/3 சொத்தினை 05.07.2021 ஆம் தேதியன்று ரூபாய் 6 லட்சம் எனக்கு தரவேண்டும் என்பதற்காக அடமானமாக பிரதிவாதி எழுதிக் கொடுத்தாரா என்றால் சரிதான். மேற்படி தொகை ரூபாய் 6 லட்சத்திற்கு டிசம்பர் 2021 வரை பிரதிவாதி எனக்கு வட்டி செலுத்திவந்தார் என்றால் சரியல்ல. 16.03.2022 ஆம் தேதியன்று பிரதிவாதியையும் அவரது மனைவியையும் வாங்கிய கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்றால் 2010 ஆம் வருடம் வாங்கியிருந்த வெற்று காசோலையை வைத்து வழக்கு போடுவேன் என்று நான் மிரட்டினேன் என்றால் சரியல்ல. 25.03.2023 ஆம் தேதியன்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தாரா என்றால் அனுப்பியிருந்தார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் நான் அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி 2021 ஆம் வருடம் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரை மாதத்திற்கு ரூ.30,000/- என ரூ 1,50,000/- என்னிடம் கொடுத்தார் என்றும் அதற்கு 2 சதவீதம் வட்டியாக ரூ.66,000/- என மொத்தம் ரூ.2,16,000/- என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ரூ2,16,000/- போக எனக்கு ரூ.3,00,000/- பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. பிராதில் உண்மைக்கு புரம்பாக பிரதிவாதி எனக்கு தொகை விபரம் குறிப்பிட்டுள்ளேன் என்றும் உண்மையில் பிரதிவாதி எனக்கு ரூபாய் 3 லட்சம் மட்டுமே திருப்பி கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா பிராது தவறான விபரங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.10 17:34:17 +0530